செஸ் உலகக் கோப்பை தொடரில் வெள்ளிப்பதக்கம் வென்ற

பிரக்ஞானந்தாவால் நாடே பெருமை கொள்கிறது!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, ஆக. 25 – செஸ் உலகக் கோப்பைத் தொடரில் வெள்ளிப் பதக்கம் வென்ற பிரக்ஞானந்தாவால் நாடே பெருமை கொள்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பாராட்டியுள்ளார்.

2023 செஸ் உலகக் கோப்பை தொடரில் வெள்ளிப் பதக்கம் வென்ற பிரக்ஞானந்தா அவர்களை வாழ்த்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

2023 செஸ் உலகக் கோப்பைத் தொடரில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியமைக் காகச் 'சென்னையின் பெருமிதம்' பிரக்ஞானந்தாவுக்கு நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள்.

உலகின் நம்பர் 2 ஆட்டக்காரரான நகமுரா, நம்பர் 3 ஆட்டக்காரரான கேருவனா ஆகியோரை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்த உமது பயணம் எங்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. இறுதி முடிவு என்னவாக இருந்தாலும், உங்களது சாதனையோடு 140 கோடி இந்தியர்களின் இதயங்களும் இணைந்து துடிக்கிறது. நம் நாடே உங்களை நினைத்துப் பெருமை கொள்கிறது பிரக்ஞானந்தா!

நீங்கள் வென்றுள்ள இந்த வெள்ளிப் பதக்கமும், கேண்டிடேட்ஸ் தொடருக்குத் தகுதி பெற்றதும் இன்னும் பல தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மதுரை, வடக்கு மதுரை மாநகர், மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பாக நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசையும் ஆளுநரையும் கண்டித்து பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற மாபெரும் உண்ணாவிரத போராட்டத்தில் மாவட்ட செயலாளர்கள் அமைச்சர் பி மூர்த்தி, கோ. தளபதி எம்.எல்.ஏ., சேடப்பட்டி மு. மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டதில் முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், துவக்கி வைய்த்தார் உடன் மதுரை வடக்கு மதுரை மாநகர் மதுரை தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், இளைஞரணி, மாணவர் அணி, மருத்துவ அணி அழைப்பாளர்கள், துணை அழைப்பாளர்கள், பொது மக்கள், மாணவர்கள் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! ஓணம் திருவிழா!

கேரள மாநிலத்தில் 1000 பேருக்கு பரிசு - இடுக்கி மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு!

பூச்சி எஸ்.முருகன் திறந்து வைக்கிறார்! மாநில அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

கேரளா, ஆக. 25 - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, கேரள மாநிலத்தில் 1000 பேருக்கு ஓணப் பரிசு, இடுக்கி மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு விழா மற்றும் கழக கொடியேற்று விழாவில், தமிழக வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் கலந்து கொண்டு அலுவலகம் திறந்து கழகக் கொடி ஏற்றி ஓணப்பரிசு வழங்குகிறார் என்று கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

கேரள மாநிலம் முழுவதும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கடந்த ஜூன் மாதம் 3 ம் தேதி முதல் அனைத்து மாவட்டங்களிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது முதல் நிகழ்ச்சியாக கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தலைமையில் 500க்கும் மேற்பட்ட பெண்களுக்கு இலவச சேலைகளை அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் போது நடைபெற்ற தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா ஊர்வலத்தில் முன்னாள் தென்காசி தெற்கு மாவட்டச்செயலாளர் பொ.சிவபத்மநாதன், கொல்லம் மாவட்ட செயலாளர் ரெஜிராஜ் உள்ளிட்ட 500 பேர் கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து கேரள மாநில தி.மு.க. விவசாய அணி சார்பாக கொல்லம் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 100 க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு கேரள மாநில திமுக அமைப்பாளர் முருகேசன் கலந்து கொண்டு விதைகள் இலவசமாக வழங்கினார். இப்போது கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் குமுளியில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா ஆக.27 ஞாயிறு காலை 10 மணிக்கு குமுளி ஒய்.எம்.சி.ஏ. ஆடிட்டோரியத்தில் கொண்டாடப்படுகிறது. கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தலைமையில் நடைபெறும் இந்நிலையில் தமிழக வீட்டு வசதி வாரிய தலைவர், கழக தலைமைக் கழக செயலாளர் பூச்சி எஸ்.முருகன் கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி வைத்து இடுக்கி மாவட்டக் கழக அலுவலகத்தை திறந்து வைத்து ஒய்.எம்.சி.ஏ. ஹாலில் நடைபெறும் நிகழ்ச்சியில் 1000 பேருக்கு ஓணப்பரிசு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் கேரள மாநில பொறுப்புக் குழு உறுப்பினர்கள் மோகன் தாஸ், ஜெயபால், ஸ்டீபன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர் இடுக்கி மாவட்ட வடக்கு செயலாளர் ஜனார்த்தனன் வரவேற்புரை ஆற்றுகிறார் இடுக்கி தெற்கு மாவட்டச் செயலாளர் கனி நன்றி உரை ஆற்றுகிறார். இந்நிகழ்ச்சியின் முன்பாக நடைபெறும் ஊர்வலத்தை கேரள மாநில தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ் தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்சியில் கேரள மாநில தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மது, விபின் முருகேசன் , பிரவீன் ராஜ், முன்னாள் மேல்புறம் ஒன்றிய செயலாளர் சிற்றார் ரவிச் சந்திரன், ஜோஸ், தங்கச்சன், அம்முக்குட்டி மற்றும் கழக முன்னணியின் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர் . இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இடுக்கி வடக்கு மாவட்டச் செயலாளர் ஜனார்த்தனன் மாநில தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் மது ஆகியோர் செய்து வருகின்றனர்.

நம்மை வழி நடத்திய நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து இருந்து இப்போதும் வழி நடத்திக் கொண்டு இருக்கும் தங்கத் தலைவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கழக கொடியேற்று விழா மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு விழா 1000 பேருக்கு ஓணப்பரிசு வழங்கும் விழா ஆகிய இந்த முப்பெரும் விழா ஊர்வலத்திலும் அதைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் அனைத்து நிகழ்ச்சியிலும் இடுக்கி மாவட்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டம் முழுவதும் உள்ள கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு கேரள மாநில தி.மு.க. சார்பாக நடைபெறும் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை வெற்றி பெற செய்ய வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேரள மாநில தி.மு.க. சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறி உள்ளார்.

கக்கன் திரைப்படத்திற்கு வரிவிலக்கு:

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

தமிழ்நாடு காங்கிரஸ் தெரிவித்தது

சென்னை, ஆக. 25- கக்கன்திரைப்படத்துக்கு வரிவிலக்கு அளித்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சுதந்திரப் போராட்ட தியாகியும், தமிழ்நாடு முன்னாள் அமைச்சருமான பி.கக்கன் வாழ்க்கை வரலாற்றை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்கிற வகையில் சங்கர் மூவீஸ் சார்பாக மேட்டுப்பாளையம் ஜோசப்பேபி தயாரித்து நடித்துள்ளார்.

இந்த திரைப்படம் உலகெங்கிலும் இன்று திரையிடப்பட உள்ளது. இந்த திரைப்படத்திற்கு வரிவிலக்கு அளித்து ஆணை பிறப்பித்துள்ள தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

இஸ்ரோ விஞ்ஞானிகளின் கடின உழைப்புக்குக் கிடைத்த அற்புத வெற்றி!

இனி உலக நாடுகளில் இந்தியா விண்ணளாவிய புகழைப் பெறும்!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை. ஆக. 25 - இஸ்ரோ விஞ்ஞானிகளின் கடின உழைப்புக்குக் கிடைத்த அற்புத வெற்றியெனவும், இனி உலக நாடுகளில் இந்தியா விண்ணளாவிய புகழைப் பெறும் எனவும் 'தினகரன்' நாளேடு 24.8.2023 தேதியிட்ட இதழில் "வானளாவிய சாதனை" என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

தினகரன்

ஆகஸ்ட் 24, 2023 வியாழக்கிழமை

வானளாவிய சாதனை

நிலவின் தென் துருவத்தில் இதுவரை எந்த நாடும் விண்கலங்களை இறக்கியதில்லை. அமெரிக்கா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகளே நிலவின் தென்துருவப் பகுதிக்கு விண்கலங்களை அனுப்பி தோல்வியை தழுவியுள்ளன. அந்த வகையில் வல்லரசு நாடுகளுக்கு இந்தியா தனது வல்லமையை நிரூபித்துக் காட்டியுள்ளது. இந்த சாதனையை இந்தியாவுக்கு உரித்தாக்கிய இஸ்ரோ விஞ்ஞானிகளை இந்திய நாடே கொண்டாடி வருகிறது.

நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக சந்திரயான் - 3ஐ தரையிறக்கிய இஸ்ரோ விஞ்ஞானிகளை, உலக நாடுகள் அனைத்தும் வெகுவாக பாராட்டி வருகின்றன.

அது வருமாறு:-

நிலவின் தென் துருவத்தில் இதுவரை எந்த நாடும் விண்கலங்களை இறக்கியதில்லை. அமெரிக்கா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகளே நிலவின் தென்துருவப் பகுதிக்கு விண்கலங்களை அனுப்பி தோல்வியை தழுவியுள்ளன. அந்த வகையில் வல்லரசு நாடுகளுக்கு இந்தியா தனது வல்லமையை நிரூபித்துக் காட்டியுள்ளது. இந்த சாதனையை இந்தியாவுக்கு உரித்தாக்கிய இஸ்ரோ விஞ்ஞானிகளை இந்திய நாடே கொண்டாடி வருகிறது.

நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக சந்திரயான் - 3ஐ தரையிறக்கிய இஸ்ரோ விஞ்ஞானிகளை, உலக நாடுகள் அனைத்தும் வெகுவாக பாராட்டி வருகின்றன.

கடந்த ஜூலை 14ம் தேதி நிலவின் தென்துருவத்தை ஆராய்ச்சி செய்வதற்காக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ, சந்திரயான் - 3 விண்கலத்தை விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலமானது புவி வட்டப்பாதையை வெற்றிகரமாக அடைந்தது. தொடர்ந்து சுற்றுவட்ட பாதை படிப்படியாக உயர்த்தப்பட்டு கடந்த ஆக. 5ம் தேதி நிலவின் சுற்றுவட்டப்பாதையை அடைந்தது.

பின்னர் சந்திரயான் - 3 விண்கலத்தின் பாதை குறைக்கப்பட்டு விக்ரம் லேண்டரை பிரிக்கும் பணிகள் கடந்த 17ம் தேதி மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து நிலவை சுற்றி வர வசதியாக விக்ரம் லேண்டரின் பாதை குறைக்கப்பட்டு நிலவின் அருகில் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து நிலவின் முதல் படத்தை விக்ரம் லேண்டர் இஸ்ரோவுக்கு அனுப்பி வைத்தது. இதனால் நிலவில் வெற்றிகரமாக தரையிறக்கப்படுமென்ற நம்பிக்கையில் இஸ்ரோ விஞ்ஞானிகள், இந்திய மக்கள் நம்பிக்கையோடு காத்திருந்தனர்.

நேற்று மாலை நிலவின் தென் துருவத்தில் விக்ரம் லேண்டரை தரையிறக்க இஸ்ரோ விஞ்ஞானிகள் ஆர்வமுடன் களமிறங்கினர். மாலை 5.44 மணிக்கு விக்ரம் லேண்டரை தரையிறக்குவதற்கான முயற்சியை தொடங்கினர். நேரம் நெருங்க, நெருங்க பதற்றம் அதிகரித்தது. விக்ரம் லேண்டரை தரையிறக்கும்போது, நிலவின் ஈர்ப்புவிசை மிக முக்கிய பங்கு வகித்தால், அதற்கு ஏற்ற வகையில், லேண்டரின் வேகத்தை கட்டுப்படுத்தும் பணிகளில் விஞ்ஞானிகள் தொடர்ந்து ஈடுபட்டனர். மிகச்சரியாக தரையிறங்க வேண்டுமே என விஞ்ஞானிகளோடு, இந்திய மக்களும் ஆர்வமுடனும், பதற்றத்துடனும் காத்திருந்தனர்.

மாலை 6.04 மணிக்கு விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கியது. இதையடுத்து இஸ்ரோ விஞ்ஞானிகள் தங்களது மகிழ்ச்சியை கைத்தட்டியும், ஆரவாரத்துடனும் உற்சாகமாக கொண்டாடினர். சர்வதேச அரங்கில் இந்தியாவின் பெருமையை வானளாவிய அளவில் உயர்த்திய விஞ்ஞானிகளை, ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி, முதல்வர் மு.க. ஸ்டாலின் மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள், பொதுமக்கள் உட்பட பலரும் பாராட்டி வருகின்றனர். உலக தலைவர்களும் இஸ்ரோவுக்கு தங்களது வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

தென் ஆப்பிரிக்காவில் இருந்தபடியே விக்ரம் லேண்டர் தரையிறங்குவதை பார்வையிட்ட பிரதமர் மோடி, "இது வரலாற்று சிறப்புமிக்க தருணம். மிக பெருமையாக இருக்கிறது. புதிய இந்தியாவின் விடியல் இது. இந்த தருணத்தை மறக்க முடியாது. இதற்கு முன் நடக்காதது. 140 கோடி இந்தியர்களின் துடிப்பால் இந்த அற்புத தருணம் உருவாகியுள்ளது என கூறியுள்ளார். ஏற்கனவே, சந்திரயான் 2 தோல்வியடைந்ததால், இம்முறை இஸ்ரோ விஞ்ஞானிகள் முழுமூச்சோடு வெற்றிகரமாக நிலவில் தரையிறக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். அந்த கடின உழைப்புக்கு அற்புத வெற்றி கிடைத்திருக்கிறது. இனி உலக நாடுகளில் இந்தியா விண்ணளாவிய புகழை பெறும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் தலைமையில்

வனப்பாதுகாப்பு - வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம்!

கிண்டி தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது!

சென்னை, ஆக. 25- வனத்துறை அமைச்சர் டாக்டர். மா. மதிவேந்தன் தலைமையில் வனப்பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தான ஆய்வுக்கூட்டம் கிண்டி முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

வனத்துறை அமைச்சர் டாக்டர். மா. மதிவேந்தன் தலைமையில் வனப்பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தான ஆய்வுக்கூட்டம் கிண்டி முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் முன்னிலையில் துறை ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்ட வனத்துறை அமைச்சர் அவர்களிடம் வனத்துறையின் உயர் அலுவலர்கள் தங்களது துறையில் வனப்பாதுகாப்பிற்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்தான முன்னேற்ற அறிக்கையின் விபரத்தினை விளக்கிக் கூறினார்கள். அதனைக் கேட்டறிந்த அமைச்சர் அவர்கள் துறையிலுள்ள அலுவலர்கள் அனைவரும் முதல்வரின் முகவரி சார்ந்த மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி விரைவில் தீர்வு காண தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், மானியக் கோரிக்கை அறிவிப்புகளுக்கு முன்னுரிமை அளித்து அதற்கான பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் எனவும் வனத்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், நமது துறை சார்ந்த வளர்ச்சித்திட்டங்கள் அனைத்தும் தொய்வின்றி செயல்பட அனைத்து நிலை அலுவலர்களும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக்கூட்டத்தில் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) சுப்ரத் முஹபத்ரா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாச ரா. ரெட்டி மற்றும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் / தலைமைச் செயல் அலுவலர் (கேம்பா) சுதா நாஷீ குப்தா, மற்றும் வனத்துறை உயர் அதிகாரிகள், தமிழகத்தில் உள்ள அனைத்து மண்டல வனப்பாதுகாவலர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், தியாகராயர் நகரில், தெற்கு உஸ்மான் சாலை மேம்பாலத்தின் சாய்வுதளப் பகுதியிலிருந்து சி.ஐ.டி. நகர் 4ஆவது பிரதான சாலையின் சந்திப்பை இணைக்கும் வகையில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ், ரூ.131 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய மேம்பாலப் பணியினை துணை மேயர் மு.மகேஷ்குமார் நேற்று (24.08.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, நியமனக் குழு உறுப்பினர்/மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன், மாமன்ற உறுப்பினர் கே.ஏழுமலை மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

துரை. கலியமூர்த்தி

ஆகஸ்ட் 25 (1989)

பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பரங்கிப்பேட்டை, சிதம்பரம் பகுதிகளில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

பரங்கிப்பேட்டை ஒன்றியச் செயலாளராக மூன்று முறையும், சிதம்பரம் நகரச் செயலாளராக இரண்டு முறையும் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு, மொழிப் போராட்டம், இலங்கைத் தமிழர் பிரச்சினை மறியல் போன்ற போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

1977ல் சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும் – 1986ல் சிதம்பரம் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்

தலைமைக் கழகம்
தி.மு.க.